பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 07 திங்கட்கிழமை 19.02.2024 கதிர் 104

# மக்களைக் கொல்லாமல் கொல்கின்றது ரணில் தலைமையிலான ஆளும் தரப்பு

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

ஜனாதிபதி ரணில் தலைமையிலான ஆளும் தரப்பு நாட்டு மக்களைக் கொல்லாமல் கொன்றுவருகிறது.220இலட்சத்துக்கும் அதிகமான மக்களைப் பொருட்படுத்தாதுபெரும்செல்வந்தர்களைமேலும்பெரும்செல்வந்தவர்களாக மாற்றிக்கொண்டு மக்களின்பேச்சுசுதந்திரத்தையும் ஜனநாயக சுதந்திரத்தையும் பறித்துவருகிறதெனஎதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பிரபஞ்சம்தகவல்தொழிநுட்ப வேலைத்திட்டத்தின்102ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறைஉபகரணங்களைபொலன்னறுவை, கதுருவெல,அல்-மினா மகா வித்தியாலயத்திற்கு வழங்கிவைக்கும்நிகழ்வில் ☞ 2



## இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் பொதுக் குழுவை மீண்டும் கூட்டி தலைவர் தேர்தல் உட்பட அனைத்துத்தெரிவுகளையும்மீண்டும்நடத்துவதற்குத்தாம்தயார்என்றுகொழும்புத் தமிழ்ப்பத்திரிகைஒன்றுக்குகட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்திருக்கிறார். கட்சிக்கு எதிராக நீதிமன்றங்களில்தாக்கல்செய்யப்பட்ட வழக்குகளைத்தொடர்ந்துகட்சியைத் தனது கட்டுப்பாட்டில் மீண்டும் எடுத்துக்கொண்டுள்ள மாவை சேனாதிராசா கிளிநொச்சியில் பெப்ரவரி23மத்தியசெயற்குழுவைக் கூட்ட ஏற்பாடு செய்துள்ளார் என்கிற நிலையில் சிறீதரனின் அறிவிப்பும் வந்திருக்கின்றது.

சிறீதரன் சொல்வதைப் போன்று கட்சியின் பொதுக் குழுவை ☞ 2

# கச்சதீவு திருவிழாவை அரசியலாக்காதீர்கள்

## செபராசா வேண்டுகோள்

கச்சதீவு திருவிழாவை அரசியலாக்கவேண்டாம். அது வேறு எல்லை தாண்டி மீன்பிடிப்பது வேறு. இரண்டையும் கலந்து இதனை மதப் பிரச்சினையாக்கவேண்டாம் என்று யாழ்.மாவட்ட கிராமிய அமைப்பின் செயலாளர் அன்டன் செபராசா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ☞ 2

# பொருளாதார மீட்சி எனும் கைக்குழந்தையுடன் ரணில் தொங்குபாலத்தில் உறுதியான நடை

## இப்படி வர்ணிக்கின்றார் ஐ.தே.க. உப தலைவர்

என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொலன்னறுவை மாவட்ட மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

நாட்டை முன்னோக்கி நகர்த்துவதாக இருந்தால் தொங்குபாலத்தில் செல்ல முடியாது என்றார்கள். ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொருளாதார மீள் எழுச்சி என்ற கைக்குழந்தையுடன் தொங்கு பாலத்தில்தான்நடந்துவருகின்றார்.

அவரை வீழ்த்துவதற்காக தொங்குபாலத்துக்கு செய்ய வேண்டிய அனைத்தையும் செய்கின்றார்கள். ஆனால் அவருடைய உறுதித்தன்மையால் அந்த முயற்சிகளில் வெற்றிகளை அடைய முடியாத நிலை காணப்படுகின்றது. எனினும், தற்போது கவர்ச்சிகரமாகச் சில தலைவர்கள் கதைகளை பேசுகின்றார்கள்.

அவர்களின் கதைகள் மீது நம்பிக்கை வைத்து அவர்களைத் தெரிவு செய்து குழந்தையை தொங்கு பாலத்திலிருந்து பாதாளத்துக்குள் மீண்டும் வீழ்த்திவிடும் பணியை மக்கள் செய்துவிடக்கூடாது என்பதே எமது கோரிக்கையாக உள்ளது என்றார்.

# படகுகளில் கறுப்புக் கொடியேற்றி இராமேஸ்வரம் மீனவர் போராட்டம்

இந்திய மீனவர்கள் மூவருக்கு எல்லை தாண்டிய குற்றத்திற்காக இலங்கையில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதைஎதிர்த்து இராமேஸ்வரம் மீன்பிடித்து துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சுமார் 800-க்கும் மேற்பட்ட விசைப் படகுகளில் நேற்றைய தினம் காலை கறுப்பு கொடியேற்றி மீனவர்கள் போராட்டம் நடத்தினர்.

எல்லைதாண்டிமீன் பிடித்த குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்ட மீன்பிடி விசைப் படகின் ஓட்டுநர்கள் இருக்கு ஆறு மாத சிறை தண்டனை மற்றும் இரண்டாவது முறையாக கைது செய்யப்பட்ட ☞ 2

### வடக்கு மீனவர் வாழ்வாதாரம் பாதிப்பு அதனால்

# அத்துமீறும் மீனவர்களுக்கான தண்டனை தவிர்க்க முடியாதது

## கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

இந்திய மீனவர்களின் அத்துமீறலால் வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரம்பாதிக்கப்படுகின்றது. அதனால் இந்தியமீனவர்களைக் கைது செய்து தண்டனைக்கு உட்படுத்த வேண்டியிருக்கின்றது என்று கடற்றொழில்அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் கருத்து வெளியிடும்போதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும் ☞ 2

# இன்று இலங்கை வருகிறார் ஈரானிய அயலுறவு அமைச்சர்

இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வவிஜயம் மேற்கொண்டு ஈரானிய அயலுறவு அமைச்சர் ஹுசைன் அமீர் இன்று இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர்அலிசப்ரியின் அழைப்பை ஏற்று அவர் இந்த பயணத்தை மேற்கொள்கிறார் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், ஈரானிய வெளிவிவகாரஅமைச்சர் இலங்கையில் தங்கியிருக்கும்காலப்பகுதியில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சரை சந்திக்கவுள்ளார்.அவருடன் அந்நாட்டு ஜனாதிபதி அலுவலகத்தின் எரிசக்தி மற்றும் வெளிவிவகார அமைச்சுகளின் உயர்மட்ட அதிகாரிகளும் வருகைதரவுள்ளதோடு குறித்த குழுவினர் பெப்ரவரி 21 நாட்டில் இருந்து புறப்பட்டுச் செல்லவுள்ளனர் என்று வெளிவிவகார அமைச்சு மேலும்தெரிவித்துள்ளது.

# மன்னாரில் காற்றாலைக்கு எதிராக கையெழுத்து இயக்கம் தொடக்கம்

மன்னார் தீவுப்பகுதியில் இரண்டாம் கட்டமாக காற்றாலைகளை அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நேற்றுக் கையொப்பங்கள் திரட்டப்பட்டன.

மன்னார் பேசாலை புனித வெற்றி நாயகி ஆலயத்தின் முன்பாகவும்,கடைத்தெருவிலும் மக்களிடமிருந்து கையொப்பங்கள் பெறப்பட்டன.

புனித வெற்றி நாயகி ஆலயத்தின் பங்குத்தந்தை அருட்தந்தை செபமாலை அன்ரன் அடிகளார் இது குறித்துத் தெரிவித்ததாவது:

மன்னார்தீவுமிகவும் பாதுகாக்கப்பட வேண்டிய தீவுகளில் ஒன்றாக உள்ளது. ஆகவே, அத்தகைய தீவிலும் காற்றாலைகள், ☞ 2

# இந்தியத் துணைத் தூதரகத்தை முற்றுகையிட்டு நாளை போராட்டம்

## அறச் சீற்றத்தோடு மீனவர்கள் அறிவிப்பு

இந்திய மீனவர்களின் எல்லைதாண்டிய அத்துமீறலை எதிர்த்து நாளை செவ்வாய்க்கிழமை யாழ். குடாநாட்டில் உள்ள இந்தியத் துணைத் தூதகரத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தப்போவதாக மீனவர் அமைப்புக்கள் அறிவித்துள்ளன.

எல்லையில் அத்துமீறிய இரு இந்திய மீன்பிடிப் படகுகளின் உரிமையாளர்களுக்கும் ஏற்கனவே ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனைவிதிக்கப்பட்ட நிலையிலும் மீண்டும் அத்துமீறியமீனவருக்கும் இலங்கையில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதை ☞ 2

# ஜனாதிபதித் தேர்தலை ரணிலால் ஒருபோதும் ஒத்திவைக்க முடியாது

## ஜே.வி.பி. தலைவர் திட்டவட்டம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் ஜனாதிபதித் தேர்தலை உரிய நேரத்தில் நடத்தாமல் இருக்கமுடியாது என்று ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திசாநாயக்கதெரிவித்தார்.

குருநாகலில்நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில்அவர்இதனைத் தெரிவித்தார்.அவர்அங்கு மேலும்தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கஜனாதிபதி தேர்தலை நடத்தாது இருப்பதற்காக பல முடிச்சுக்களைபோட்டுள்ளதாகக்கூறுகின்றார்கள். அவர் மிகுந்த தந்திரம் உள்ளவர்என்பதைநாம் அறிவோம். ஆனால் அவரால்ஜனாதிபதி தேர்தலை உரிய திகதியில் நடத்தாது இருக்க முடியாது. அவ்வாறு இருப்பதற்கு அவர் பல சதித்திட்டங்களை தீட்டலாம். ஆனால் அவை நடைமுறையில் வெற்றியளிப்பதற்கு இடமளிக்க முடியாது.

ஒக்டோபர் 17 என்ற நாளுக்கு முன்னதாக சுபமுகூர்த்தம் வரும். அது இந்த நாட்டின் தலையெழுத்தை மாற்றும். அந்தத் திகதிக்காகவே நீங்களும், நாங்களும் காத்திருக்கின்றோம். ஆனால் அந்தத் திகதியை ரணில் தவிர்ப்பாராயின் சனி அவரைப் பிடித்துக் கொள்ளும். அவர் மக்களால் ஆட்சியிலிருந்து வெளியேற்றப் படுவார்.

ஏனென்றால், இந்த நாட்டில் 69 இலட்சம் மக்கள்ஆணைவழங்கிய கோட்டாபயவையும், மூன்றிரலிரண்டுபெரும்பான்மை பலத்துடன் இருந்த மஹிந்த ராஜபக்சவையும்அதிகாரத்தினை விட்டு அகற்றிய மக்களே உள்ளார்கள். அவர்கள் மீண்டும் தமது இறைமைக்காக ☞ 2

# வறட்சியால் மின் தேவை அதிகரிப்பு சிக்கனமாக பயன்படுத்த அறிவுறுத்து

தற்போது நிலவும் வறட்சி காரணமாக நாளாந்த மின்சாரத்திற்கான தேவை 3 முதல் 4 ஜிகாவாட் வரை அதிகரித்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் ஊடகப்பேச்சாளர் நோயல் பிரியந்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மையநாட்களில் ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக இந்த நாட்களில் நீர் மின் உற்பத்தி 21 சதவீதமாகக் குறைந்துள்ளது.

தற்போதுநீர்மின்னுற்பத்தி நிலையங்களுடன் தொடர்புடைய நீர்த்தேக்கங்களின் கொள்ளளவு 83 சதவீதமாக உள்ளது.

சூரியசக்திமூலம்4.5 சதவீதமின்சாரம்உற்பத்தி செய்யப்படுகிறது. காற்றாலை மூலம் 5 சதவீத மின்சாரம் உற்பத்தியாகின்றது. 64 சதவீத மின்சாரம் அனல் மின் உற்பத்தி மூலம் பெறப்படுகின்றது.

இதனால் மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துமாறு இலங்கைமின்சாரசபை மக்களுக்குஅறிவுறுத்தும் செயற்பாட்டை ஆரம்பித்துள்ளது என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

யாப்புப்படிமீண்டும்கூட்டுவதாயின் அது உடனடியாக நடக்கக்கூடிய ஒன்றல்ல. ஏனெனில் பொதுக் குழுவைக் கூட்டுவதற்கு முன்னர் செய்யப்படவேண்டியிருப்பதாக யாப்புக்கூறும்பலவிடயங்கள்கடந்த காலங்களில்செய்யப்படவேயில்லை. கட்சியின் யாப்பில் மூலக் கிளைத் தேர்தல்கள் நடத்தப்பட்டு அதன் பின்னர் தொகுதிக் கிளைத் தேர்தல்கள் நடத்தப்பட்டு மாவட்டக் கிளைத் தேர்தல்கள் நடத்தப்பட்ட பின்னரே பொதுக் குழுவைக் கூட்டவேண்டும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. ஆனால் கட்சியின் தொகுதிக் கிளைகள் பல இடங் களில் கூட்டப்படவேயில்லை. திருகோணமலை மாவட்டத்தில் ஒரு தொகுதிக் கிளைகூட இல்லை. யாழ்ப்பாணத்திலும் பல இடங்களில் தொகுதிக் கிளைகளின் தெரிவு நடக்காமல்தான் மாவட்டக் கிளைத் தெரிவு நடத்தது. எனவே மீண்டும் யாப்புப்படி இவற்றையெல்லாம் சரிப்படுத்தி பொதுச் சபையைக் கூ-ட்டுவதாயின் நீண்ட அதற்கு நீண்ட நாட்கள் எடுக்கக்கூடும். கட்சிக்குள் ஏற்கனவே முரண் பாடுகள் முற்றியுள்ள நிலையில் இப்போதைக்கு தொகுதிக் கிளைகளைச் சீரமைப்பதும் புதிய தெரிவுகளை நடத்துவதும் மிகஇல குவான காரியங்களல்ல. அவற்றை முடிப்பதற்கே குறைந்தபட்சம் சில மாதங்களாவது ஆகலாம். அதுவரையில் சீறிதரன் புதிய தலைவராக முடியாது. அதற்குக் காரணம் உண்டு.

கட்சிக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளில், திருகோணமலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், ஜனவரி 21 திருகோணமலையில் நடத்தப்பட்ட பொதுச் சபைக் கூட்டம் மற்றும் ஜனவரி 27 நடத்தப்பட்ட பொதுச் சபைக் கூட்டம் ஆகியனவும் கட்சி யாப்புக்குமுரணாகநடத்தப்பட்டவை என்று கூறி அவற்றுக்கு எதிராகவும் இடைக்காலக் கட்டாணை பெறப்பட்டுள்ளது. எனவே, அந்தக் கட்டாணைகள்இருக்கும்வரைக்கும் சிறீதரன் கட்சித் தலைவராக இருக்க முடியாது. இதனால் இப்போதும் தானே கட்சியின் தலைவர் என்று உரிமை கோரியிருக்கும் மாவை சேனாதிராசா, இந்தப் பிரச்சினை தொடர்பாக ஆராய்வதற்காக கட்சியின் செயற்குழுவை கிளிநொச்சியில் கூட்ட நடவடிக்கை எடுத்திருக்கிறார். ஆனால், அதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்னமும் மத்திய செயற்குழுவின் உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கப்படவில்லை என்று உறுதிப்படுத்த முடிந்தது.

வழக்குகள் உள்ள நிலையில் மத்திய செயற்குழுவைக் கூட்டுவது சட்டச் சிக்கல் என்று சுட்டிக்காட்டப்பட்டபோது, அது புதிய செயற்குழுவிற்குத்தான், இடைக்காலக் கட்டாணை விதிக்கப்பட்டுள்ள நிலையில் கட்சியின் தலைவராக நானே தொடர்கின்றேன் என்பதால் பழைய செயற்குழுவே இப்போதும் பதவியில் இருக்கின்றது, அதனைக் கூட்டுவதில் தடை எதுவும் இல்லை என்று கூறியே மாவையர் பெப். 23 மத்திய செயற்குழுவைக் கூட்ட நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்கு மத்தியில் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் பின்னணியில் சுமந்திரனே இருக்கிறார் என்று நாடாளுமன்ற உறுப்பினர்சிறீதரனும்மாவையும் உறுதியாக நம்புகின்றார்கள் என்று தெரிகின்றது. சனிக்கிழமை யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுமந்திரனும் சிறீதரனும் பக்கத்துப் பக்கத்தில் அமர்ந்திருந்தனர். ஆனால், கட்சியின் வழக்கு மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக இருவரும் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. வேறு விடயங்கள் குறித்து அவர்கள் இருவரும் பேசியபோதும் கட்சி விவகாரங்கள் குறித்து அவர்கள் எதுவும் பேசவில்லை. வழக்குப் போட்டவரிடமே போய் கட்சிக்காக வழக்குப் பேசுங்கள் என்று எப்படிக் கேட்பதுஎன்கிறநிலைப்பாட்டிலேயே சிறீதரன் இருக்கின்றார் என்று தெரிகின்றது.

அதேபோன்று, நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் நடந்த நிகழ்வு ஒன்றில் மாவையரும் சுமந்திரனும்நேருக்குநேர்சந்தித்துக் கொண்டனர். பரஸ்பரம் சுகநலன் விசாரித்துக்கொண்டனர். எனினும் கட்சிவிவகாரம்தொடர்பில்அவர்கள் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. குறைந்தபட்சம் கட்சியின் மத்திய செயற்குழுக்கூட்டம்தொடர்பிலாவது மாவையர் சுமந்திரனுக்கு எதுவும் தெரிவிக்கவில்லை. இந்தியத் துணைத் தூதுவராக யாழ்ப்பாணத்தில்பதவிவகித்தவரான ரகேஸ்நட்ராஜ்பதவி உயர்வுபெற்று இங்கிருந்து புறப்படுகின்றார். அவருக்கான பிரியாவிடை நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள விடுதி ஒன்றில் நடைபெற்றது. அந்த நிகழ்விலேயே மாவையரும் சுமந்திரனும் நேரில் நலன் விசாரித்துக் கொண்டதுடன் தமக்கிடையிலான தொடர்பாடலை முடித்துக் கொண்டனர்.

இவ்வாறு இப்போது கட்சிக்குள் நிரந்தரமாக ஒரு பிளவு நிலை ஏற்பட்டுள்ளதை இந்த நகர்வுகள் தெளிவுபடுத்துகின்றன. இதனை வாய்ப்பாகக் கொண்டு சுமந்திரனை கட்சிக்குள்முற்றாகஒதுக்குவதற்கான முனைப்புக்களும் பரவலாகத் தென்படுகின்றன. கட்சித் தலைவர் போட்டியில் சுமந்திரனை எதிர்த்து சிறீதரனை ஆதரித்த தரப்புக்கள் கட்சியைவிட்டு சுமந்திரனை ஒதுக்குவதில் இப்போது மேலும் முனைப்புக்காட்டி வருவதை சமூக ஊடகங்களில் பார்க்க முடிகின்றது. அந்தத் தரப்புக்கள் தலைவர் போட்டியில் கட்சியில் 137 பேர் சுமந்திரனைஆதரித்தார்கள்என்பதை மறந்துவிட்டன. சுமந்திரனை கட்சியிலிருந்து ஒதுக்குவது என்பது கட்சியை இரண்டாக உடைக்கும் ஏதுநிலைகளுக்கு வழிவகுக்கும் என்பதை அந்தத் தரப்புக்கள் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மக்களைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றைய தினம் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இந்த சாபக்கேடான ஆளும் தரப்பின் ஆயுட்காலம் இவ்வருடத் துடன் முடிந்து விடும். மக்களுக்கு சாபக்கேடான, மக்கள் படும் துன்பத்தை கண்டுகொள்ளாத தற்போதைய ஆட்சியாளர்களை வீட்டிற்கு அனுப்பி மாற்றத்தை ஏற்படுத்தும் வருடம் 2024 ஆகும். இந்தமாற்றத்தின்மூலம்இந்நாட்டின் கல்வி முறையை மேம்படுத்தி, வேறுபட்ட பரிமாணத்திற்குகொண்டு சென்று, அறிவும்திறனும்நிரப்பமாகக் கொண்ட மாணவச்செல்வங்களாக வலுப்படுத்தி வெற்றிகரமான தேசத்தை உருவாக்குவோம். இப்பயணத்தில் அனைவரையும் இணைந்து கொள்ளுங்கள்.

'நம்மால் முடியும்' என்ற கொள்கையுடன் நாம் ஒன்றாய் முன்னோக்கி செல்ல வேண்டும். தகவல் தொழில்நுட்பக் கல்விக்கு இந்தியாவழங்கியமுன்னுரிமையின் விளைவாக, வீட்டுப்பணியாட்களை விட தகவல் தொழிநுட்ப அறுவும் திறனும் கொண்ட திறமையான பணியாளர்களை வெளிநாடுகளின் தொழிலாளர் சந்தைக்கு இந்தியா அனுப்பி வருகிறது. இந்தியாவுக்கு அத்தகைய திறன் இருந்தால், நமது நாட்டிலும் அத்தகைய திறன் உண்டு. 'நம்மால் முடியும்' என்ற கொள்கையுடன் நாமும் ஒன்றாய் முன்னோக்கி செல்லவேண்டும்

தற்போது, தாய்-சேய் ஊட்டச்சத்து குறைபாடு அதிகரித்து வரும் நேரத்தில், ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் பாடசாலை மாணவர்களுக்கு மீண்டும் மதிய உணவு வழங்கப்படும். உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்றி அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் ஸ்மார்ட் உபகரணம்வழங்கப்படும்என்றார்.

## இந்தியத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்த்து இராமேஸ்வரம் மீனவர்கள் கச்சதீவுத் திருவிழாவைப் புறக்கணித்துள்ளதுடன் போராட் டங்களிலும்ஈடுபட்டுவரும்நிலையில் பதிலுக்கு யாழ். குடாநாட்டிலும் மீனவர்கள் போராட்டங்களை அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்ட கடற் தொழிலாளர் கூட்டுறவு சமாசத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த மீனவப்பிரதிநிதிகள்தமதுபோராட்டம் குறித்த அறிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

எமது கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்களில் அத்துமீறல் தொடர்ச்சியாகஇடம்பெற்றுவருகிறது. எமது வளங்கள் நாளுக்கு நாள் தொடர்ச்சியாகச் சூறையாடப்படும் நிலையில் எமது வாழ்வாதாரமும் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டு வருகிறது.

நாங்கள் பல தடவைகள் இலங்கைஆளும்தரப்புக்கும்இந்திய அரசுக்கும் கோரிக்கை விடுத்தோம். எமக்கு உங்கள் உதவிகள் வேண் டாம்எமதுவளத்தைஇந்தியமீனவர் களிடம் இருந்து பாதுகாத்து தாருங் கள் என்று பல தடவைகள் கோரிக்கை விடுத்தோம் ஆனால் அது நடைபெறவில்லை.

தற்போது இராமேஸ்வரம் மீனவர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். தமது மீனவர்கள் வாழ்வாதாரத்துக்காக இலங்கை கடற்பரப்புசென்றார்கள், அவர்களைக் கைதுசெய்துவிட்டார்கள், அவர்களை விடுவிக்கவேண்டும் என்று கோரிக்கை விடுகிறார்கள்.

நாங்கள் அவர்களிடம் ஒன்றைக் கூற விரும்புகிறோம் நீங்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி வருவது பெரும் குற்றம் மட்டுமல்லாது எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிப்பதையும் செய்கிறீர்கள். ஆகவே இந்திய மீனவர்கள் அத்துமீறுவதை நிறுத்துமாறு கோரி யாழ். இந்திய துணைதூதரகத்தைமுற்றுகையிட்டு போராட்டம் நடத்த உள்ளோம் என்றனர்.

## ஜனாதிபதித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தில் இறங்குவதற்குத் தயங்க மாட்டார்கள் என்பதை ரணில் விக்கிரமசிங்க புரிந்து கொள்ள வேண்டும்.

அதுமட்டுமன்றி, அடுத்த ஜனாதிபதி தேர்தலில் நாங்கள் தோல்வி அடையலாம்; வெற்றி பெறலாம். எது நிகழ்ந்தாலும் அதனையேற்றுச்செயற்படநாங்கள் தயாராகவே உள்ளோம். ஆனால் ரணில்விக்கிரமசிங்கபோன்றவர்கள் தோல்வி அடைந்தால் என்ன செய்வது என்பது சம்பந்தமாகவே அதிகமாக யோசிக்கின்றார்கள்.

அதற்காகவே பல சதித்திட்டங்களை தீட்டுகின்றார்கள். ஆனால் மக்களின் சக்தியின் முன்னால் அச்சதித்திட்டங்கள் அனைத்தும் வீணாகும் என்றார்.

## படகுகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீனவருக்கு ஓராண்டு சிறை தண்டனை விதித்தமையை கண்டித்து இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் தொடர் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

சிறையில் அடைக்கப்பட்ட மீனவர்களைஉடனடியாகவிடுவிக்க வலியுறுத்தி இம்முறை கச்சத்தீவு திருவிழாவை புறக் கணிப்பது என்று இராமேஸ்வரம் மீனவர்கள் ஏற்கனவே தீர்மானித்துள்ளனர். அத்துடன் சனிக்கிழமை முதல் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்திலும்ஈடுபடப்போவதாக அறிவித்திருந்தனர்.

''வயிற்றுப்பிழைப்புக்காக மீன்பிடிக்கச்சென்ற மீனவர்களை கைது செய்துள்ள இலங்கை அரசு அவர்களின் மூவவருக்கு சிறைத்தண்டனைவழங்கியுள்ளது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மூவாயிரம் பேர் செல்வதற்குப் பதிவு செய்திருந்த கச்சதீவு திருவிழாவை புறக்கணிப்பதற்குத் தீர்மானித்துள்ளோம். நாம் கச்சதீவு திருவிழாவில் பங்கேற்கப் போவதில்லை. அதுமட்டுமன்றி மாவட்டஆட்சியர்அலுவலகத்திற்குச் சென்று எமது படகுகளின் உரிமத்தினையும், நாம் இந்திய குடிமக்கள் என்பதற்கான அரச ஆவணங்களையும் மீள ஒப்படைப்பதற்குதிட்டமிட்டுள்ளோம்” என்றுநேற்றையபோராட்டம்குறித்து இரமேஸ்வரம்விசைப்படகுமீனவர் சங்கத்தின் தலைவர் யேசுராஜ் தெரிவித்தார்.

# பிறந்தநாள் விழாவில் மோதல்: தடுக்க முயன்றவர் கொலை



புத்தளம் பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இடம்பெற்ற பிறந்தநாள் விழாவில் இரு சகோதரர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலின்போது அதனைத் தடுப்பதற்கு முயன்ற இரு பிள்ளைகளின் தந்தை பலத்த கத்திக்குத்து காயங்களுக்குள்ளாகி புத்தளம்ஆதாரவைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில்நேற்று(ஞாயிற்றுக் கிழமை) உயிரிழந்துள்ளார் எனப் புத்தளம் தலைமையக பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

புத்தளம்வேப்பமடுவ பிரதேசத்தில் வசித்து வந்த 32 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான அமித் மதுரங்க என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக் கப்படுகின்றது.

குழந்தையின் பிறந்தநாள் விழாவின்போதே இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.(05)

# வவுனியாவில் 80 ஆயிரம் மில்லி கிராம் ஐஸ் போதையுடன் ஒருவர் கைது!



வவுனியா, தம்பனைச்சோலை பகுதியில் 80 கிராம் ஐஸ் போதைப்பொருளைஉடைமையில் வைத்திருந்த நபர் ஒருவரை வவுனியா தலைமை பொலிஸ் நிலைய போதைத்தடுப்பு பிரிவு பொலிஸார்நேற்றுகைதுசெய்தனர்.

குறித்த பகுதியில் போதைப் பொருள்விற்பனை இடம்பெறுவதாக பொலிஸாருக்குக்; கிடைத்த தகவலையடுத்து வவுனியா தலைமை பொலிஸ் அதிகாரியின வழிகாட்டலில்வவுனியாமதுஒழிப்பு பொலிஸ் பிரிவின் நிலைய பொறுப்பு அதிகாரி பொலிஸ் பரிசோதகர் றிஸ்வி தலைமையில் பொலிஸ் சார்ஜன்களான கீர்த்தி ரத்தின, சொய்சா, டிசாநாயக்க, பொலிஸ் கான்ஸ்டபிள்களான குமார, விதுசன் ஆகியோரால் தம்பனைச்சோலை பகுதியில்அமைந்துள்ளவீடொன்றில் விசேட சோதனை நடத்தப்பட்டது.

இதன்போது 80 ஆயிரம் மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன், அதனைஉடைமையில்வைத்திருந்த நபர் ஒருவரைக் கைது செய்தனர். கைதுசெய்யப்பட்டவர்மேலதிகவிசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.(05-100)

## அத்துமீறும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

இலங்கை, இந்திய மீனவர் களுக்கு இடையிலான நீடிக்கும் பிரச்சினையானது இருதரப்பினரதும் வாழ்வாதாரத்தினை மையப் படுத்திய பிரச்சினையாகும். ஆனால் இது இலங்கையின் வடபகுதி மீனவர்களைப் பெருமளவில் வாழ்வாதார ரீதியாக பாதிக்கின்றது.

இந்திய மீனவர்கள் தடைசெய்யப்பட்ட உபகரங்கணைப் பயன்படுத்தி அதாவது இழுவைப்படகுகளைபயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதால் எமது மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது. அவர்களின் மீன்பிடி உபரகங்கள் சேதப்படுத்தப்படுகின்றன. கடல் வளம் அழிவடைகின்றது.

ஆகவே, இந்த சட்டவிரோதமான செயற்பாடு நிறுத்தப்பட வேண்டும் இல்லையென்றால் அதனை மேற்கொள்பவர்கள் கைதுசெய்யப்பட்டுதண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் - என்றார்.

## மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மண்ணகழ்வு போன்ற செயற்பாடுகளை ஏற்றுக் கொள்ள முடியாது.

இந்த விடயம் சம்பந்தமாக நாம் அதிகாரிகளுடன் பலதரப்பட்ட பேச்சுக்களை முன்னெடுத்துள்ளோம். அனால், கொழும்பில் உள்ள அதிகாரிகளும், வெளிநாட்டு நிறுவனங்களும், வெளிநாட்டு இராஜதந்திரிகளும் இங்கே வருகை தந்து எமது மண்ணின் உண்மையான நிலைமைகளை அறியாது தமது இலாப நோக்கத்தினை நிறைவேற்ற முற்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்தச் செயற்பாடுகள் தொடரப்படுகின்றபோது, மன்னார் தீவுமக்கள்இங்கிருந்துஎதிர்காலத்தில் வெளியேறிச் செல்ல வேண்டிய நிலைலமைகள் ஏற்படும் என்ற பெரும்அச்சம்எமக்குள்ளதுஎன்றார்.

## கச்சதீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களிடம்அவர்இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியாவிலிருந்து 3500 பேர் கச்சதீவு திருவிழாவிற்கு வருகை தருவதாகப் பதிவு செய்திருந்த நிலையில்இப்போதுபுறக்கணிப்பதாக அறிவித்துள்ளார்கள். இங்கே மதத்தினை வைத்து அரசியல் செய்ய வேண்டாம். திருவிழாவிற்கு வருகை தருவதும், வழிபடுவதும் கொண்டாட்டங்களில் ஈடுபடுவதும் ஒருவிடயம். ஆனால்எல்லைகளைத் தாண்டிவருகை தந்து மீன்பிடியில் ஈடுபடுவதும் எமது வாழ்வாதாரத்தினை அழிப்பதும் பிறிதொரு விடயம். ஆகவே கச்சதீவு திருவிழாவிற்கும், எல்லை தாண்டுவதற்கும் எந்தவிதமான தொடர்புகளும் கிடையாது.

இங்கே எல்லைதாண்டும் பிரச்சினையை கச்சதீவு திருவிழாவுடன் தொடர்புபடுத்தி அதனை மதப்பிரச்சினையாக மாற்றுவதற்கு முயற்சிக்க வேண்டாம். எமது மீனவர்களும் வருவார்கள், தமிழ்நாட்டு மீனவர்களும் வருகை தந்து மகிழ்ச்சியாக திருவிழாவை நடத்திவிட்டுச் செல்வது தான் பொருத்தமான செயற்பாடாகும் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# விவசாயப் பயிர் பாதுகாப்பு துப்பாக்கிகள் வவுனியாவில் 125 பேருக்கு வழங்கி வைப்பு





வவுனியா மாவட்டத்தில் 125 பேருக்கு விவசாய பயிர் பாதுகாப்பு துப்பாக்கிகள் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானால் வழங்கி வைக்கப்பட்டது. வவுனியா மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

யுத்தத்தால் பாதிப்படைந்த வவுனியா மக்கள் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் நிலையில் விலங்குகளால் விவசாய செய்கைக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன் காரணமாக, பல விவசாயிகளின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதாரம் என்பன பாதிப்படைந்துள்ளன. இதனால் விவசாயிகளின் விவசாய செய்கையை பாதுகாக்கும் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 125 பேருக்கு குறித்த விவசாய பாதுகாப்பு துப்பாக்கிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் மற்றும் பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05)

# வெள்ளம் பாதித்த குறிஞ்சாக்கேணி மக்களுக்கு நிவாரண உதவிகள்





(அஸ்ஹர் இப்றாஹிம்)

குறிஞ்சாக்கேணி மாகாத் நகர் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மற்றும் வறுமை நிலையிலுள்ள குடும்பங்களுக்கு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக்யின் கோரிக்கைக்கமைவாகக் கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமானுடைய பரித்துரையின்கீழ் எல்.ஐ.ஓ.சி. நிறுனத்தின் அனுசரணையில் நிவாரண உதவிகள் தௌபீக் எம்.பியால் வழங்கிவைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் எல்.ஐ.ஓ.சி.நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் தீபக் தாஸ், முன்னாள் கிண்ணியா பிரதேச சபைத் தவிசாளர்களான ஜவாதுல்லா, சனூஸ் மற்றும் எல.ஐ.ஓ.சி. நிறுவனத்தின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர. (05)

# முல்லை விஸ்வநாதர் ஆரம்பப் பாடசாலையின் புலமைப்பரிசில் சாதனையாளர்கள் கௌரவிப்பு





முல்லை விஸ்வநாதர் ஆரம்பப்பாடசாலையின் 2023 ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் துரிதகணிதம் சாதனைபடைத்த மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வு விஸ்வநாதன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் கோட்டக்கல்விப் பணிப்பாளர்

சி. பாஸ்கரன் மற்றும் யோ.கௌரிநேசனும் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினரின் அனுசரணையில் மாணவர்களின் கற்றல் நடவடிக்கையை மேேண்படுத்தும் முகமாக விஸ்வநாதர் பாடசாலைக்கென ஸ்மாட் கல்வி நடவடிக்கை மேற்கொள்வதற்கான கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு எற்பாடுகள் செய்துதருவதாகவும் உறுதியளித்தார்

இன் நிகழ்வில் ஆசிரியர்களும் விருந்தினர்களும் மதிப்பளிக்கப்பட்டனர்.

(05-113)

# உலக உணவு திட்டத்தின் கீழ் சம்மாந்துறையில் இரண்டாம் கட்ட நிவாரண பொதிகள் வழங்கல்

சம்மாந்துறை நிருபர் எஸ்.என்.தில்சாத் பர்வீஸ்



*உலக உணவுத் திட்டத்தின் கீழ் சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தின் போது பாதிக்கப்பட்ட குடும்பங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட சுமார் 1262 குடும்பங்களுக்கு சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா தலைமை யில் வெள்ளிக் கிழமை நிவா ரணப் பொதிகள் வழங்கும் நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.*

*இந் நிகழ்வின் தொடர்ச்சியாக இரண்டாம் கட்ட நிவாரண பொதிகள் வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை புளக் து மேற்கு 01,02, சம்மாந்துறை 10,11,12, கருவட்டுக்கல் 01,02 , வீரமுனை 01,02,03,04 ஆகிய கிராம மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன. இந்நிவாரண பொதிகள் வழங்கும் நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலக அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர் எஸ்.எம். எம் அஸாறுடீன், திட்டமிடல் பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.என்.எம் சசீர், புவி, பிரிவுக்குப் பொறுப்பான பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொணடனர். (05)*

# வடக்குக்கு வந்த சுற்றுலாவியிடம் பொருள்கள் திருட்டு ஒருவர் கைது

(அஸ்ஹர் இப்றாஹிம்)

யாழ்ப்பாணம் அச்சுவேலி பிரதேசத்தில் நண்பர் ஒருவரின் வீட்டில் தங்கியிருந்த வெளிநாட்டு உல்லாசப் பிரயாணியொருவர் குளியலறைக்கு சென்ற சமயம் பார்த்து அவரின் பொருள்களை ஒருவர் திருடிச் சென்றுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் துரிதமாக பொலிஸார் செயற்பட்டதன் காரணமாக சந்தேகநபர் ஒரு மணிநேரத்திற்குள் கைது செய்யப்பட்டதுடன் திருடப்பட்ட பொருள்களும் கைப்பற்றப்பட்டு உள்ளன. திருடப்பட்ட பொருள்களுள் வெளிநாட்டு, உள்நாட்டு பணம், மடிக்கணிணி, கமரா உட்பட மேலும் பல பொருள்கள் அடங்கியுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மீனவர்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வே அவசியம்

இந்திய – இலங்கை மீனவர்களின் பிரச்சினை மீண்டும் ஒரு தடவை உச்சமடைந்துள்ளது. இரு தரப்பினரும் தமது நிலைகளை வலியுறுத்திப் போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர். இது நிலமைகளை மேலும் சிக்கலுக்கு உள்ளாக்கி வருகின்றது.

எல்லைதாண்டிவந்து மீன்பிடிக்கும் இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்வதும் பின்னர் அவர்கள் சட்ட மா அதிபரின் அறிவுறுத்தலின்படி விடுவிக்கப்படுவதும் வழக்கமாக இருந்து வந்தது. இந்த நடவடிக்கையினால் அத்துமீறல் குறையாக காரணத்தால் சட்டங்களில் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டது. அத்துமீறல் தண்டனைக்குரிய குற்றமாக்கப்பட்டது. அத்துமீறுபவர்களின் படகுகளைப் பறிமுதல் செய்யவும் படகு உரிமையாளர்களை, அவர்கள் படகில் இருந்தாலும் இல்லாவிட்டாலும்கூட குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்கவும் சட்டத் திருத்தங்கள் செய்யப்பட்டன.

இந்த மாற்றங்களின் அடிப்படையில் அத்துமீறி முதல் தடவையாக இலங்கை எல்லைக்குள் மீனவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அப்படி ஒத்திவைக்கப்பட்ட தண்டனை விதிக்கப்பட்டவர்கள் மீண்டும் அத்துமீறி நுழைந்தால் அவர்களுக்கு இரண்டாவது தடவை சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இப்படி அண்மையில் கைது செய்யப்பட்டவர்களில் இரு படகுகளின் உரிமையாளர்களுக்கும் இரண்டாவது தடவையாகவும் அத்துமீறிய மீனவர் ஒருவருக்கும் வடக்கு நீதிமன்றங்கள் சிறைத் தண்டனை விதித்திருந்தன.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இராமேஸ்வரம் மீனவர்கள் கச்சதீவுத் திருவிழாவைப் புறக்கணிக்கிறார்கள் என்று அறிவித்தார்கள். அத்தோடு கடற்றொழிலுக்குச் செல்லாது அவர்கள் போராட்டத்திலும் ஈடுபட்டுள்ளார்கள். இந்தியாவில் இது தேர்தல் காலம் என்பதால் புதுடில்லியில் ஆளும் தரப்புக்கு இது பெரும் நெருக்கடியைக் கொடுக்கும். தமிழ்நாட்டில் ஆளும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் டில்லியில் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சிக்கும் இடையில் எட்டாப் பொருத்தம் என்பதால், இந்தத் தேர்தல் காலத்தில் இந்த விவகாரம் இன்னும் தீப்பற்றி எரிய வாய்ப்புக்கள் உள்ளன.

இந்திய மீனவர்களின் போராட்டங்களின் எதிரொலியாக இலங்கையில், யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தை முற்றுகையிடப் போகிறார்கள் என்று இங்குள்ள மீனவர் சங்கங்கள் அறிவித்துள்ளன. இரு தரப்பு மீனவர்களும் தங்களது போராட்டங்கள் தமது வாழ்வாதாரத்துக்கானவை என்றே கூறுகின்றார்கள். ஆனால் இதில் அதிகளவில் பாதிக்கப்படுபவர்களாக இலங்கையின் வடக்கு மீனவர்களே உள்ளார்கள். இந்தியாவின் விசைப் படகுகள் மிகப் பெரியவையாகவும் இழுவை மடித் தொழிலைச் செய்பவையாகவும் இருப்பதால், இலங்கைப் பகுதிகளில் கடல் வளம் அழிக்கப்படுவது மட்டமல்லாமல் மீனவர்களின் வலைகள் மற்றும் தொழில் உபகரணங்களும் கடுமையாகச் சேதமாக்கப்படுகின்றன. பல லட்சம் ரூபாய் முதலிட்டு அவர்கள் வாங்கும் உபகரணங்கள் அழிக்கப்படும்போது மீனவர்களால் அதிலிருந்து மீளமுடியாத நிலை ஏற்படுகின்றது. அதனால்தான் அவர்கள் இந்திய மீனவர்களின் அத்துமீறல்லை நிறுத்தும்படி தொடர்ந்து கோருகின்றார்கள். போராட்டம் நடத்துகின்றார்கள்.

இரு நாட்டு அரசுகளும்தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும். மீனவர்களுக்கு மாற்று வழிகளைக் காட்டியிருக்கவேண்டும். இதற்கும் பல தடவைகள் முயற்சிகள் எடுக்கப்பட்டபோதும் அது கைகூடி வரவில்லை. இரு அரசுகளும் தீர்வுகளைக் கண்டறியவில்லை. இதன் விளைவே இப்போது இரு பகுதிகளிலும் கொந்தளிப்பு ஏற்பட்டிருப்பதற்குக் காரணம். இலங்கை இந்திய இரு நாடுகளிலுமே இது தேர்தல் ஆண்டாக இருப்பதால் இந்தப் பிரச்சினையின் தாக்கம் அதில் கணிசமான எதிரிவினையை ஏற்படுத்தும்.

இந்தப் பிரச்சினையைத் தீர்க்காமல் இரு அரசுகளும் இன்னும் காலத்தை–இழுத்தடித்தால் அது மேலும் சிக்கல்களை ஏற்படுத்தவே வழி வகுக்கும். எனவே தேர்தல் காலத்தைச் சமாளிப்பதற்கான தற்காலிகத் தீர்வுகளை நாடாமல் இந்தப் பிரச்சினைக்கு தொடர்ச்சியாகப் பேசி ஒரு நிரந்தரத் தீர்வைக் காணவேண்டியது அவசியம்.

# பாகிஸ்தானில் தொங்கு நாடாளுமன்றம்? ஆட்சி அமைப்பதில் இன்னமும் இழுபறி ?

ஐங்கரன் விக்கினேஸ்வரா



பாகிஸ்தான் தேர்தல் ஆணையம் நாடாளுமன்றத் தேர்தலின் இறுதி முடிவுகளை அறிவித்துள்ளது. பெப்ரவரி 8 நடந்த தேர்தலில் சுயேச்சை வேட்பாளர்கள் 101 பேர் வெற்றி பெற்றுள்ளனர். அவர்களில் 90 பேர் முன்னாள் பிரதமர் இம்ரான் (ஐஅசயெ முாயெ) கானின் தரீக்கே இன்ஸாஃப் கட்சியின் ஆதரவாளர்கள்.

**புதிய பிரதமர் வேட்பாளராக ஷெபாஸ் ஷெரீப் :**

பிந்திய தகவல்களின்படி, பாகிஸ்தானின் புதிய பிரதமர் வேட்பாளராக ஷெபாஸ் ஷெரீப்பையும், பஞ்சாப் மாகாண முதல்-மந்திரியாக தனது மகளான மரியம் நவாசையும் நியமனம் செய்வதாக நவாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.



பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவர் பிலாவல் பூட்டோ - சர்தாரி பிரதமர் போட்டியில் இருந்து விலகியதை அடுத்து இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.



முன்னாள் பிரதமர் நவாஸ் ஷரீஃபின் (யேறயண ளூயசகை) பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி 75 இடங்களைக் கைப்பற்றியது. பாகிஸ்தான் மக்கள் கட்சியும் 54 தொகுதிகளில் வென்றது.

பாகிஸ்தானில் பொதுத்தேர்தல் முடிந்து, முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத காரணத்தால் ஆட்சி அமைப்பதில் தொடர்ந்து இழுபறி நீடித்து வருகிறது. பாகிஸ்தானில் அடுத்த ஆட்சி அமைக்கப்போவது யார் என்ற கேள்வி இன்னமும் உள்ளது.

**பாகிஸ்தான் பொருளாதார நெருக்கடி:**

கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளம், தொடர்ச்சியாக நீடித்து இருக்கும் பொருளாதார நெருக்கடி என பாகிஸ்தான் கடும் பாதிப்புகளைச் சந்தித்து வந்தது. இதன் தொடர்ச்சியாக, அதன் பிரதமர் இம்ரான் கான் மீது எழுப்பப்பட்ட ஊழல் குற்றச்சாட்டு, நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வி என அரசியல் பேரிடரிலும் பாகிஸ்தான் சிக்கியிருந்தது. இதிலிருந்து நாடு மீள நாடாளுமன்ற பொதுத்தேர்தலை நடத்துவதுதான் ஒரே வழி என தேர்தல் அறிவிக்கப்பட்டது.

தேர்தலுக்கு ஒரு நாளைக்கு முன்னர் இரட்டை குண்டு வெடிப்பு சம்பவம் நடந்ததால், தேர்தல் அமைதியான முறையில் நடத்தப்படுமா என்கிற கேள்வியும் எழுந்தது. இருப்பினும் நாடு முழுவதும் இன்டெர்நெட் சேவை முடக்கப்பட்டு தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டது. அந்நாட்டின் சட்ட விதிகளின்படி, தேர்தல் முடிந்து அடுத்த 14 நாட்களுக்குள் அதன் முடிவுகளை அறிவித்துவிடவேண்டும்.

**மாகாண தேர்தலில் சுயேச்சை வெற்றி**

பாகிஸ்தானில் வாக்குப்பதிவு முடிந்து 3 நாட்களுக்குப் பிறகு முடிவுகள் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டன. இதில் எந்த கட்சிக்கும் ஆட்சி அமைக்கும் அளவுக்கு பெரும்பாண்மை கிடைக்கவில்லை. மொத்தம் 854 தொகுதிகளில் நாடாளுமன்ற மற்றும் மாகாண தேர்தல் நடந்தது. இதில் அதிகபட்சமாக 348 இடங்களில் சுயேச்சைகள் வெற்றி பெற்றுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் முன்னாள் பிரதமரும் பாகிஸ்தான் தெஹ்றிக் இன்சாப் கட்சி தலைவருமான இம்ரான் கானின் பிடிஐ கட்சியை சேர்ந்தவர்களாவர்கள். கட்சியின் கிரிக்கெட் பேட் சின்னம் மறுக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் சுயேச்சையாக களமிறங்கியிருந்தனர்.

கட்சிகளைப் பொறுத்தவரையில், முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் நவாஸ் (பிஎம்எல்-என்) 227 இடங்களில் வெற்றி பெற்று, அதிக தொகுதிகளை வென்ற கட்சியாக உள்ளது. பாகிஸ்தான் மக்கள் கட்சி (பிபிபி) 160 இடங்களிலும், எம்க்யூஎம்-பி கட்சி 45 இடங்களிலும் வென்றுள்ளன.

**நாடாளுமன்ற தேர்தலிலும் சுயேச்சை வெற்றி!**

நாடாளுமன்ற தேர்தலைப் பொறுத்தவரையில், வாக்குப்பதிவு நடந்த 265 தொகுதிகளில் சுயேச்சைகள் 101 தொகுதிகளில் வென்றுள்ளனர். நவாஸ் கட்சி 75 இடங்களிலும், பிபிபி கட்சி 54 இடங்களிலும், எம்க்யூஎம்-பி கட்சி 17 இடங்களிலும் வென்றுள்ளன. மத்தியில் ஆட்சி அமைக்க ஒரு கட்சி 265 இடங்களில் 133 தொகுதிகளில் வெல்ல வேண்டியது அவசியம்.



இதனுடன், பெண்கள் மற்றும் சிறுபான்மையினருக்கான நியமன இடங்களையும் சேர்த்து மொத்தமுள்ள 336 தொகுதிகளில் 169 இடங்களை கைப்பற்ற வேண்டும். ஆனால் ஆட்சி அமைக்கும் அளவுக்கு எந்தக் கட்சிக்கும் பெரும்பாண்மை வெற்றி கிடைக்காததால், கூட்டணி ஆட்சி அமைக்க நவாஸ் கட்சி தீவிர முயற்சி எடுத்து வருகிறது. மறுபுறம் சிறு சிறு கட்சிகளை ஒன்றிணைக்க இம்ரான் கானின் கட்சியினர் முயன்று வருகின்றனர்.

(6ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர் Kalaikkathir

# நிலாவெளி சுற்றுலா கரையோரங்களை சுத்தம் செய்கின்ற பணிகள் மும்முரம்





(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் நிலாவெளி கரையோரத்தை சுத்தம் செய்யும் பணி சனிக்கிழமை இடம் பெற்றது. அதிகளவான வெளிநாட்டு ,உள்நாட்டு சுற்றுலா பயணிகளை கவரும் இப்பகுதியானது சுத்தம் செய்யப்பட்டது.

புறாமலை போன்ற சுற்றுலா பகுதிக்கான இடமாகவும் உள்ளமையால் கரையோரம் சுத்தம் செய்யும் பணி இடம் பெற்றது. அதிகளவான வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வருகை இங்கு அதிகரித்துள்ளது இதன் மூலம் இப் பகுதியில் கடல் பிரதேசத்தின் ஒரு தீவில் புறாமலை எனும் சுற்றுலா பிரதேசத்தை நோக்கி அதிகம் பயணிக்கின்றனர். படகு மூலமாக இப் பிரதேசத்தை அடைய வேண்டியுள்ள நிலையில் மனதுக்கு இதமான தீவாகக் காணப்படுகிறது.

இதனை நிலாவெளி பகுதியில் உள்ள ஹோட்டல்கள், படகு ஓட்டுனர்கள், ஓட்டோ சங்கங்கள்,கரையோர பாதுகாப்பு திணைக்களம்,பொலிஸார்,ரைவிங் பாடசாலை என பல அமைப்புக்கள் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்ததுடன் சுமார் 7கிலோ மீற்றர் தூரம் வரையான கரையோர பகுதிகள் சுத்தம் செய்யப்பட்டன. இதன் மூலம் சுற்றாடலைப் பாதுகாக்கவும் பொலித்தீன் பாவனை உட்பட ஏனைய சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருள்கள் அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்டன.

இதில் சுமார் நூற்றுக்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டனர்.

(05)

# அட்டாளைச்சேனை நலன்புரியால் கல்வியியலாளர்கள் கௌரவிப்பு!



(கே.ஏ.ஹமிட்)

அட்டாளைச்சேனையில் புதிதாக அதிபர் சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்டவர்கள், அதிபர் சேவையில் இருந்து ஓய்வுபெற்றவர்கள் மற்றும் ஓய்வு பெறவுள்ளவர்கள் என கல்வியியலாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

அட்டாளைச்சேனை நலன்புரி அமைப்பு ஏற்பாடு செய்த இந்த விருது வழங்கும் நிகழ்வு லொய்ஸ் மண்டபத்தில் சனிக்கிழமை இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை கல்விக் கோட்டத்தில் புதிதாக அதிபர்களாக உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ளவர்கள், கடந்த காலங்களில் சிறப்பாகப் பணியாற்றி ஓய்வு பெற்ற, அதிபர் சேவையில் இருந்து கிட்டிய காலத்திற்குள் ஓய்வுபெறவுள்ள அதிபர்கள் கௌரவிக்கும் நிகழ்வை அட்டாளைச்சேனை நலன்புரி அமைப்பின் தலைவர் எம்.ஜே.எம்.அன்வர் நௌஷாத் தலைமையில் இடம்பெற்றிருந்தது. இந்தக் கல்வி விருது வழங்கும் நிகழ்வில் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்களான எச்.எம்.எம்.ஹரீஸ், பைஷால் காசீம் ஆகியோருடன் கிழக்கு மாகாணத்தின் முன்னாள் அமைச்சர் எம். எஸ். உதுமாலெப்பை ஆகியோருடன் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அட்டாளைச்சேனை அமைப்பாளர் ஏ கே அமீர், முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட பிரதித் தலைவரும் சட்டத்தரணியுமான எஸ்.எம்.ஏ. கபூர், ஸ்ரீ.ல.மு.கா.கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள் மற்றும் பிரமுகர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

(05)


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்




4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee
Chikne Fried Rice with
Vegetable
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# பேத்தாழை பொது நூலக வருடாந்தப் பரிசளிப்பு

கோறளைப் பற்று பிரதேச சபையின் கீழ் இயங்கி வரும் பேத்தாழை பொது நூலகத்தின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு சனிக்கிழமை பேத்தாழை பொது நூலகக் கேட்போர் கூடத்தில் கோறளைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் ச.நவநீதன் தலைமையில் இடம்பெற்றது.

தேசியக் கொடி ஏற்றத்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு வெற்றிச் சான்றிதழ்களை பிரதம அதிதியாக நிகழ்விற்கு வருகை தந்திருந்த கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான சிவ. சந்திரகாந்தன் வழங்கி வைத்தார்.

அத்துடன், பேத்தாழை பொது நூலகம் மற்றும் விபுலானந்தர் கலை இலக்கிய மன்றம் ஆகியவை இணைந்து கல்குடா கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிடையே நடத்திய 'அறிவுத் தேடல்' கலை இலக்கிய வினா விடைப் போட்டியின் இறுதிப் போட்டி நடைபெற்றது.

இந்தப் போட்டியை கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசாரபீட விரிவுரையாளர் ஜீ.பால்ராஜ், கிழக்குப் பல்கலைக்கழக கல்விமாணி சிறப்புக் கற்கை மாணவன் கே.பிரசாந்த் ஆகியோர் நடுவகம் செய்திருந்தனர்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த அறிவுசார் போட்டியில் மட்ஃகுஃவாழைச்சேனை இந்துக் கல்லூரி மற்றும் மட்ஃகுஃகிரான் மத்தியகல்லூரி மாணவர்கள் மோதியிருந்த நிலையில், மட்ஃகுஃகிரான் மத்தியகல்லூரி மாணவர்கள் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டனர்.

இவர்களுக்கான வெற்றிச் சின்னமாக பேத்தாழை விபுலானந்தர் கலை இலக்கிய மன்றத்தின் தனித்துவ பாராட்டுச் சின்னமான 'மகரயாழ்' மகுடத்தை இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் வழங்கி கௌரவித்தார்.

இந்நிகழ்வில் கோறளைப் பற்று பிரதேச சபை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்.ட ஜனாப். அ.ஹாரூன் மற்றும் கிராம உத்தியோகத்தர், பிரதேச பாடசாலை அதிபர்கள், பேத்தாழை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் (தெற்கு), பாலர் பாடசாலை ஆசிரியர்கள், பிரதேச நூலகப் பொறுப்பாளர்கள், பாடசாலை மாணவர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05)

# 9 நாள்களேயான குழந்தையை சட்டவிரோதமாக விற்கமுயன்றவர் மினுவாங்கொடையில் கைது

*(எம்.எம்.ஜெஸ்மின் )*

*மினுவாங்கொடை பிரதேசத்தில், பிறந்து 9 நாள்களே ஆன குழந்தையை வேறு தரப்பினருக்கு சட்டவிரோதமான முறையில் விற்க முயன்ற பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*விமானப்படை புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியக அதிகாரிகளால் இந்த பெண் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.*

*28 வயதுடைய சந்தேக நபர், பெண் குழந்தையின் தாய் எனத் தெரியவந்துள்ளது.*

*அத்துடன், அவர் குழந்தையை 3 லட்சத்து 60 ஆயிரம் ரூபாவுக்கு விற்க திட்டமிட்டிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.*

*மினுவாங்கொடை, பன்சில் கொட பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக மினுவாங்கொடை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.*

*தற்போது மினுவாங்கொடை பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர் திங்கட் கிழமை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.*

*(05)*

# பாகிஸ்தானில் தொங்கு.......

(4ஆம் பக்கத் தொடர்ச்சி..)

**இம்ரான்கான் மீது குற்றச்சாட்டு:**

பாகிஸ்தானில் நடைபெற்ற போதுத் தேர்தல் முடிவுகள் இராணுவத்திற்கும், மேற்கத்தய அரசுகளுக்கும் அதிர்ச்சியை அளித்துள்ளதாகத் தெரிகிறது.




பாகிஸ்தானில் ஆட்சியில் இருந்த இம்ரான்கானின் ஜனநாயக அரசு சூழ்ச்சிகரமாக கவிழ்க்கப்பட்டது. இந்தச் சதியைத் திட்டமிட்டது அமெரிக்காதான் என இம்ரான்கான் பகிரங்கமாகவே குற்றஞ்சாட்டினார்.

அது மட்டுமன்றி, இம்ரான்கான் மீது பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் பலவிதமான குற்றச்சாட்டுகளைச் சுமத்தி 34 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து சிறையில் அடைத்தது. அவர் கிரிக்கெட் வீரர் என்றபடியால் தனது கட்சியின் தேர்தல் சின்னமாக வைத்திருந்த கிரிக்கெட் மட்டை சின்னத்தையும் முடக்கியது. இருந்தும் அவரது தேர்தலில் சுயேச்சையாகத் தனது வேட்பாளர்களை நிறுத்தி ஆகக்கூடுதலான தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளார்.

இம்ரான்கானின் வெற்றி பாகிஸ்தானின் ஆட்சியாளர்களுக்கும், அவர்களின் இராணுவ அதிகார வர்க்கத்துக்கும் சாவடி கொடுத்துள்ளது. அத்துடன் அமெரிக்க, மேற்கத்தய அரசுகளுக்கும் ஓர் அதிர்ச்சி வைத்தியம் கொடுத்துள்ளது.

**நவாஸ் ஷெரிஃப் – பிலாவல் புட்டோவும் கூட்டணி:**

பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவர் பிலாவல் பூட்டோ சர்தாரி செவ்வாயன்று, ஆட்சி அமைப்பதை உறுதி செய்வதற்காக முஸ்லிம் லீக்-நவாஸ் கட்சியின் வேட்பாளருக்கு ஆதரவாக வாக்களிக்கும் என்றும் கூறினார். அந்த அமைச்சரவையில் இடம்பெறாமல், வெளியில் இருந்து ஆதரவு தருவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பிலாவல் பூட்டோ மக்கள் கட்சிக்கு ஆட்சி அமைக்க மக்கள் வாக்களிக்கவில்லை என்பதால் பிரதமர் பதவிக்கு தாம் வேட்பாளராக இல்லை என்றார். மற்ற அரசியல் கட்சிகளுடன் பேச்சு நடத்தும் குழுவைத் தனது கட்சி அமைத்து வருவதாக பிலாவல் பூட்டோ கூறியுள்ளார்.

பாகிஸ்தானை நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து மீட்டெடுக்க வேண்டும், நாட்டில் உறுதிப்பாடு திரும்பவேண்டும். நாடு மீண்டும் தேர்தல் நடத்தும் நிலையில் இல்லை. அது நாட்டின் உறுதிப்பாட்டுக்கும் நல்லதல்ல. நாங்கள் ஆட்சியில் பங்கெடுக்காவிட்டாலும், அரசை ஆதரிப்போம் என பிலாவல் பூட்டோ கூறியுள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

# திருமலை மாவட்டத்தில் புண்ணிய கிராம நிகழ்வு





(எப்.முபாரக்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் திருகோணமலை மாவட்ட செயலகம் மற்றும் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சியின் வழிகாட்டலின் கீழ் கந்தளாய் பிரதேச செயலகத்துடன் இணைந்து கந்தளாய் பிரதேசத்தின் அனைத்து சமய ஆலயங்கள் மற்றும் அறநெறி பாடசாலைகளின் பங்களிப்புடன் கந்தளாய் சோழீஸ்வர் (சிவன்) ஆலயத்தில் புண்ணிய கிராம நிகழ்வு இடம்பெற்றது.

ஆலய பூஜை, கோமாதா பூஜையை தொடர்ந்து நந்திக்கொடியேற்றி அறநெறி கீதம் இசைத்து மங்கள விளக்கேற்றி இறைவணக்கத்துடன் இந்த நிகழ்வு ஆரம்பமானது.

ஆசியுரையை தொடர்ந்து வரவேற்பு நடனம், தனி நடனம் மற்றும் பேச்சு போன்ற கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றதுன.

பங்குபற்றிய அறநெறி மாணவர்களுக்கு பரிசில்களும் வழாங்கி வைக்கப்பட்டன.

நான்கு இன மத குருமார்களும் மற்றும் நான்கு இன அறநெறி பாடசாலை மாணவர்களும் இதன் போது கலந்துகொண்டு சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி, கந்தளாய் உதவி பிரதேச செயலாளர் உ.குமணன், மாவட்ட இந்து சமய கலாசார உத்தியோகத்தர், மாவட்ட கலாசார உத்தியோகத்தர், சோழீஸ்வரர் ஆலய (சிவன் ) தலைவர் , அறநெறி பாடசாலை மாணவர்கள், முத்துமாரியம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்கள், விக்னேஸ்வரா அறநெறி பாடசாலை மாணவர்கள், சோழீஸ்வரர் ஆலய (சிவன் ) அறநெறி பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆலய பரிபாலன சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05)

# அம்பாறை ஊடகவியலாளர்களுடன் சுகாதார பணிப்பாளர் சந்திப்பு



(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸுக்கும் அம்பாறை நகர ஊடகவியலாளர்களுக்கும் இடையிலான சிநேகபூர்வ சந்திப்பு அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை பிரதேசங்களில் நிலவும் சுகாதார பிரச்சினைகள் அவற்றை நிவர்த்திக்க ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் செய்ய வேண்டிய வேலைத்திட்டங்கள், சுகாதார பிரச்சினைகளைத் தீர்க்க ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் கடந்த காலங்களில் ஆற்றிய சேவைகள் தொடர்பாக நீண்ட நேர கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது அம்பாறை பிராந்திய ஊடகவியலாளர்கள் சுகாதார சேவைகள் பணிமனையின் சகல நடவடிக்கைகளுக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாகவும், மக்களுக்கும்- சுகாதாரத் துறைக்கும் உள்ள இடைவெளியைக் குறைக்க தாம் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் உறுதியளித்தனர்.

ஊடகவியலாளர்களுக்கு சுகாதாரத்துறை இடைவெளிகள், வளப்பங்கீடுகள், வள பற்றாக்குறை போன்ற பல விடயங்களையும் விளக்கினார். அத்துடன் சுகாதாரத்துறை அறிவூட்டல் நடவடிக்கை தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. (05)

# தீபச்செல்வன் எழுதிய பயங்கரவாதி திருகோணமலையில் அறிமுக விழா





(ஹஸ்பர் ஏ.எச்)

ஈழ எழுத்தாளர் தீபச்செல்வன் எழுதிய பயங்கரவாதி நாவல் அறிமுக விழா சனிக்கிழமை மாலை 3.20 மணிக்கு திருகோணமலை நகரசபை பொது நூலக கேட்போர் கூடத்தில் கவிஞர் ஓய்வு நிலை அதிபர் க . யோகானந்தன் தலைமையில் இடம் பெற்றது.

தொடக்கவுரையை கவிஞர் ஆசிரியர் தி. பவித்ரன் வழங்கினார்.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினர் முன்னாள் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் சி. தண்டாயுதபாணிக்கு நூல் ஆசிரியர் தீபச்செல்வன் நூலின் முதல் பிரதியை வழங்கி வெளியீட்டு வைத்தார். தண்டாயுதபாணி சிறப்புரை நிகழ்த்தினார்.(05)

# கிழக்கு மாகாண ஆளுநர் வீடுகளை கையளித்தார்





(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேசத்தில் மீள்குடியேற்ற அமைச்சால் யுத்தத்தால் பாதிக்கபட்ட மக்களுக்காக 2023 ஆம் ஆண்டு தெரிவுசெய்யப்பட்ட 26 பயனாளிகளுக்கு ரூபா 6 லட்சம் மற்றும் 10 லட்சம் பெறுமதியான வீடுகள் வழங்கபட்டன.

அதன் முதல் கட்டமாக மூன்று வீடுகள் கடந்த புதன்கிழமை பிரதேச செயலாளர். த.கஜேந்திரன் தலைமையில் அவரின் அழைப்பின் பெயரில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான டி. வீரசிங்க ஆகியோர் திருக்கோவில் பிரதேச செயலகத்திற்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டு மூன்று வீடுகளையும் பயனாளிகளுக்குக் கையளித்தார்.

இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி எஸ்.நிருபா, நிர்வாக உத்தியோகத்தர் ரி.மோகனராஜா, கிராம சேவைக்கு பொறுப்பான நிருவாக உத்தியோகத்தர் என்.கந்தசாமி, திட்டத்திற்கான கள உத்தியோகத்தர்கள் ,பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பயனாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (05)



# நற்பிட்டிமுனை முஸ்லிம்களின் வாழ்வியலும் வரலாறும் வெளியீடு

(கே எ ஹமீட்)

நற்பிட்டிமுனை முஸ்லிம்களின் வாழ்வியலும் வரலாறும் நூல் வெளியீடு கல்முனை ஆஷாத் பிளாஸா மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்களான எச்.எம்.எம்.ஹரீஸ், பைஷால் காசீம் முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் எம் எல் எம் ஹிஸ்புல்லா, கிழக்கு மாகாணத்தின் முன்னாள் அமைச்சர் எம் எஸ் உதுமாலெப்பை, அக்கரைப்பற்று முன்னாள் மாநகர சபை உறுப்பினர் எஸ் எம் சபீஸ் மற்றும் இன்னும் பல அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கலந்து கொண்டவர்களுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் நூலை வெளி யீடு செய்து வழங்கி வைத்தார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# கிழக்கின் அதிகார மையம் ஏற்றத்தாழ்வுமிக்கது கல்வியை சீரழிக்க எடுத்த முயற்சி முறியடிப்பு

## எச்.எம்.எம். ஹரீஸ் கூறுகிறார்



(நூருல் ஹுதா உமர்)

முப்பது வருடங்களுக்கு முன்னர் இணைந்த வடக்கு கிழக்கு, ஆயுதப் பின்னணி என பயங்கரமாக இருந்த கிழக்கு மாகாணத்தில் தலைவர் எம்.எச்.எம். அஸ்ரப் ராஜதந்திரமாக காய் நகர்த்தினார். ஆனால் இன்று உலகமே உற்று நோக்கிக் கொண்டு யாரை யாரும் அச்சுறுத்த முடியாத ஜனநாயக சூழலில் 42 சதவீதத்துக்கும் கூடிய முஸ்லிம்கள் கிழக்கில் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போது அவர் கோபித்துவிடுவார் இவர் கோபித்து விடுவார் என்று பொறிமுறை இல்லாதவர்களாக முஸ்லிம் மக்களும் நமது தலைமைத்துவங்களும் இருக்கின்றனர். இந்த நிலை மாற வேண்டும் என முன்னாள் இராஜாங்க அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை நலன்புரி அமைப்பு ஏற்பாடு செய்த கல்வி விருது விழா சனிக்கிழமை நடைபெற்ற போது அங்கு கலந்து கொண்டு உரையாற்றிய அவர் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில் -

அம்பாறை அரசாங்க அதிபர் காரியாலயத்தில் அவமானப்படும் விடயம், திருகோணமலை கல்வி திணைக்களத்தில் தமக்கான தேவைகளை நிபர்த்திக்க அலைமோதும் விடயம், அநியாய இடமாற்றங்களால் கற்பிணிகள் பாதிக்கப்பட்டு ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். இவர்களை அரசியல் சாயம் பூசி அடித்து துரத்த தயாராகிறார்கள். இவற்றையெல்லாம் முறியடிக்க நாங்கள் கடுமையாக பிரயத்தனங்களை எடுக்கிறோம். இந்த நிலை ஏன் உருவானது? என்பதை நாங்கள் சிந்திக்க வேண்டும்.

2021 ஆம் ஆண்டின் சுற்றுநிருபத்தின் அடிப்படையில் ஆசிரிய பற்றாக்குறை அம்பாறையில் இருக்கத்தக்கதாக 400 ஆசிரியர்கள் ஒரு தடவையில் மாவட்டத்திற்கு வெளியே இடமாற்றம் செய்ய எத்தணித்த விடயம் அம்பாறையில் ஆசிரியர்கள் மிதமிஞ்சி இருப்பதாலா என்றால் இல்லை. அதன் பின்னணி பற்றி நாங்கள் சிந்திக்க வேண்டும். கிழக்கு கல்வி உயரதிகாரி ஒருவர் புதிதாக வந்துகொண்டு ஜனாதிபதி, ஆளுநர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்ற யாரையும் பற்றியோ புரட்டகோல் பற்றியோ அலட்டிக்கொள்வதில்லை. அவரின் சுயரூபத்தை நான் கல்வியமைச்சில் வைத்து ஓராண்டுக்கு முன்னர் அறிந்துகொண்டேன். இப்போது இந்தப் பதவியை வைத்துக்கொண்டு அவரின் நீண்டநாள் கனவான அம்பாறை கல்வி அடைவை குறைக்க முயல்கிறார். இதற்கு பலியாக போவது புத்துணர்வு மிக்க இளம் ஆசிரிய சமூகம். நன்றாகக் கற்பிக்கும் ஆசிரியர்களை மட்டக்களப்பு மாவட்ட மூலைமுடுக்குக்கெல்லாம் இடமாற்றம் செய்யத் திட்டம் போடப்பட்டுள்ளது. இதை வருடாந்த இடமாற்றம் என்று நினைக்க வேண்டாம். இது புளியந்தீவிலுள்ள ஒரு குழுவின் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரல். இதனை முறியடித்து ஜனாதிபதி செயலாளர், ஆளுநரை கொண்டு நாங்கள் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுத்துள்ளோம். கிழக்கின் அதிகார மையம் ஏற்றத்தாழ்வு மிக்கதாக உள்ளதை யாரும் மறுக்க முடியாது.

செயற்திறன் கூடிய அதிபர்கள் பாடசாலைகளை பொறுப்பேற்று நடத்த முன் வருகின்ற போது நிறைய புரட்சிகள் பாடசாலைகளில் நடக்கின்றன. மாணவர்கள் சேர்க்கை குறைந்து கல்வியில் வீழ்ந்து கிடந்த இரண்டு பாடசாலைகளை இப்படியான செயற்திறன் கூடிய அதிபர்கள் மேம்படுத்தி இன்று மாணவர்களை சேர்க்க நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிபாரிசு தேவைப்படுமளவுக்கு அந்த பாடசாலைகளில் கல்வி உயர்ச்சி கண்டுள்ளது. இப்படியான அதிபர்கள் மீது எனக்கு எப்போதும் மரியாதை இருக்கிறது. அப்படியான அதிபர்களாக நீங்களும் உங்கள் பணியை சிறப்பாக செய்து கல்வித்துறையில் சிறந்த எதிர்காலத்தை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

(05)

# பெண்கள் அரசியலில் பங்களிப்பு செய்வதற்கான செயலமர்வுகள்





(ஹஸ்பர் ஏ.எச்)

ஏ.எச்.ஆர்.சி. நிறுவனத்தால் சனிக்கிழமை திருகோணமலை மாவட்டத்தில் பெண்களை அரசியலில் பங்களிக்க செய்வதற்கான ஆளுமைகளை விருத்தி செய்யும் செயலமர்வு திருகோணமலையில் இடம்பெற்றது .இச் செயலமர்வில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பிரதேசங்களில் இயங்கும் பெண்கள் அமைப்புக்களை சார்ந்த 22 பெண் செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டனர்.

இலங்கை தேர்தல் வரலாற்றில் பெண்களின் பிரதிநிதித்துவம் அல்லது பெண்களின் ஈடுபாடுகள் குறைவாகவே காணப்பட்டு வருகின்றமையை வரலாறுகள் உணர்த்தி நிற்கின்றன. ஆனால் இன, மொழி மத பேதங்களைக் கடந்து பெண் என்ற ஒருநிலையில் பார்க்கும்போது அனைத்து பெண்களும் தேர்தலில் புறக்கணிக்கப்பட்டே வருகின்றனர்.

இந்நிலை மாறவேண்டும் இந்நிலையில் இருந்து பெண்களை வெளிக்கொண்டு வருவதன் ஊடாக ஆளுமை திறன்கள் உள்ள பெண்களை இனங்கண்டு அவர்களின் தேர்தல் ஈடுபாடுகளை அதிகரிக்கச் செய்தலின் ஊடாக எதிர்காலத்தில் பெண்களின் பங்களிப்பைக் கூட்டுவதை நோக்கமாக கொண்டும் இலங்கை மக்கள் தொகையில் 52 வீதமாக இருக்கும் பெண்களை தேர்தலின் பங்களிக்க செய்து அவர்களின் அரசியல் பலத்தின் ஊடாக பெண்களின் அனைத்துவிதமான உரிமைகளையும் அனுபவிக்கச் செய்வதையும் நோக்காகக் கொண்டு பெண்களை தேர்தல்களில் பங்களிக்கச் செய்தல் எனும் தொனிப்பொருளின் ஊடான கருத்தரங்கை மேற்கொண்டிருந்தனர்.

இக்கருத்தரங்கில் மாவட்ட ரீதியில் இயங்கும் பெண் செயற்பாட்டாளர்கள் 22 பேர் கலந்துகொண்டிருந்தனர். இதற்கான சட்ட ஆலோசனைகளை வழங்க சட்டத்தரணியும் திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் இணைப்பாளரும் ஆகிய மயூரன் பிரசான்டினியும் வளவாளர்களாக அகம் மனிதாபிமான வள நிலையத்தின் பெண் செயற்பாட்டாளர்களான சஞ்ஜலிதா குணாளன், நாகேஸ்வரன் மிரேகா மற்றும் பெண் செயற்பாட்டாளர்களான சிவநாதன் நிரோஜா, வேலன் குமாரி ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

(05)

# அல்லற்படும் பலஸ்தீன் மக்களுக்காக பட்டத்தை பரிசளித்த ஓட்டமாவடி யஸீர்

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் 16ஆ வது பட்டமளிப்பு விழா கடந்த 10, 11 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

அன்றைய தினம் 5 ஆவது அமர்வில் தனது கலைமாணி பட்டத்தைப் பெற்றுக்கொண்ட ஓட்டமாவடியைச் சேர்ந்த எம்.என்.எம். யஸீர் அறபாத், பட்டமளிப்பு விழா மேடையில் பலஸ்தீன சால்வையை அணிந்து தோன்றியமை பலரின் கவனத்தையும் ஈர்த்திருந்தது.

தனது பட்டத்தைப் பெற்றுக்கொள்ளும் போது பலஸ்தீன சால்வையை அணிந்து கொள்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்த நிலையில், பட்டமளிப்பு முடிந்த கையோடு, அவர் விழா மேடையில் ஏறி பலஸ்தீன சால்வையை அணிந்து கொண்டார்.

இது தொடர்பில் அவர் கருத்துத்தெரிவிக்கையில் -

'கல்வி ரீதியாக ஒரு பட்டத்தைப் பெற்றுக்கொள்ளும் இந்த நாள் எனக்கு மகிழ்ச்சிகரமானது. என்றாலும், பலஸ்தீனத்தில் அப்பாவி மக்களும், குழந்தைகளும் இஸ்ரேல் தாக்குதலில் கொல்லப்படுவதை நினைக்கையில், இந்த சந்தோசத்தை முழுமையாக அனுபவிக்க முடியவில்லை' எனக்குறிப்பிட்டிருந்தார்.

எனவே தான், பலஸ்தீன மக்களுக்கான தனது ஆதரவையும் இஸ்ரேலுக்கான எதிர்ப்பையும், இது போன்றதொரு பெரிய மேடையில் வெளிப்படுத்துவது பொருத்தமாக இருக்குமென்பதற்காகவே பலஸ்தீன கொடியை தான் சால்வையாக அணிந்து அம்மேடையில் தோன்றியதாக அவர் மேலும் தெரிவித்திருந்தார். தனது இரண்டரை வயதில் தாயை இழந்த யஸீர் அறபாத், தனது தாயின் மூத்த சகோதரி மரியம் பீவியின் பராமரிப்பில் வளர்ந்து கல்வியையும் பெற்று பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

குறித்த நிகழ்வில் பட்டத்தைப் பெற்ற பின்னர் தன்னை வளர்த்து, தன் கல்விக்கு பக்கபலமாக இருந்து மரணித்த பெரியம்மாவின் புகைப்படத்தை கையிலேந்தி தன் பட்டத்தோடு புகைப்படம் எடுத்துக்கொண்டது காண்போரை மெய்சிலிர்க்க வைத்தது. இது ஏனைய இளைஞர்களுக்கு ஒரு செய்தியை எடுத்துக்காட்டியுள்ளது. கல்வியில் பட்டம், பதவிகளைப் பெற்ற போதிலும் உயர்த்தி விட்டோரை மறக்கலாகாது என்பதுடன், இன்னொரு சகோதரன் அல்லற்படும் போது நமது சந்தோசங்கள் அவனது கண்ணீரை மறைத்து விடக்கூடாது எனும் தகவலையும் பதிவு செய்கின்றது.

தற்காலத்தில் பல பிள்ளைகள் உயிரோடு இருக்கும் பெற்றோரை மறந்தும், புறக்கணித்தும் வாழும் போது, சிறுபராயத்தில் தாயை இழந்த தன்னை வளர்த்து ஆளாக்கிய தாயை தற்போது உயிரோடில்லாத நிலையிலும், தன் கல்விக்கு பக்க பலமாக இருந்த அன்னாரின் ஆசையை நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணத்தில் தான் பட்டப்படிப்பைத் தொடர்ந்து இன்று ஒரு பட்டதாரியாக முடிந்துள்ளதாகவும் குறிப்பிட்டமை கவனிக்கத்தக்கது.

இவ்வாறான நிகழ்வைப்பார்க்கும் போது நமது உறவினர்கள் மற்றும் குடும்பங்களில் இருக்கும் ஆதரவற்ற பிள்ளைகள் மீது கரிசனை காட்டும் போது சமூகத்திற்கு நல்ல பிள்ளைகளை உருவாக்குவதோடு, நாம் மரணித்தாலும் அவர்கள் நம்மை மறக்காது நம் பெயரை காத்து நிற்பார்கள் என்பது இச்சகோதரனின் செயல் சான்று பகிர்வதை உணர முடிகின்றது. இவ்வாறு சிறுபராயத்தில் தாயை இழந்து இழப்புகளைச்சந்தித்து அதன் வலிகளை உணர்ந்ததால் தான் இன்று பலஸ்தீனத்திலே கொத்து கொத்தாக உறவுகளை இழந்து தவித்துக் கொண்டிருக்கும் மக்களுக்காக இந்த இளைஞன் தன் உணர்வை வெளிப்படுத்தினான் என்பது தெளிவாகிறது.

(05)

# செட்டிகுளத்தில் 650 ஏக்கர் காணியை 650 குடும்பங்களுக்கு வழங்க ஏற்பாடு

*வவுனியா, செட்டிகுளம் பகுதியில் 650 ஏக்கர் வயல் காணியை 650 குடும்பங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.*

*வவுனியாவில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.*

*அவர் மேலும் தெரிவிக்கையில் –*

*வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அருவித்தோட்டம் பகுதியில் பல நூறு ஏக்கர் காணிகளை விடுவித்துக் கொடுக்கப்பட்டிருந்தும் அதனை 15 பேர் மாத்திரமே செய்து வருகின்றனர். இந்த வயல் காணிகளை மீளப் பெற்று தலா ஓர் ஏக்கர் வீதம் காணியற்ற 650 குடும்பகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். இதனால் பல குடும்பங்கள் தமது வாழ்வாதாத்திற்காக நெற் செய்கையில் ஈடுபட முடியும்.*

*இது தொடர்பாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதுடன் அரச அதிபர், பிரதேச செயலாளர், கமநலசேவை திணைக்கள உதவி ஆணையாளர் ஆகியோருக்கும் தெரியப்படுத்தியுள்ளேன். அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ளனர் எனத் தெரிவித்தார்.*

*(05-100)*

காலைக்கதிர் Kalaikkathir

# கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமானால் முஸ்லிம் உயர் அதிகாரிகள் புறக்கணிப்பு

## தொழிலதிபர் ஏ.கே.அமீர் குற்றச்சாட்டு




(கே எ.ஹமீட்)

கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமானால் கிழக்கு மாகாணத்திலுள்ள சிரேஷ்டத்துவம் மிக்க முஸ்லிம் உயர் அதிகாரிகள் புறக்கணிப்பு என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அட்டாளைச்சேனை அமைப்பாளரும், தொழிலதிபருமான ஏ.கே. அமீர் குற்றச்சாட்டினார்.

அட்டாளைச்சேனை நலன்புரி அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கல்வி விருது விழா அட்டாளைச்சேனை லொயிட்ஸ் வரவேற்பு மண்டபத்தில் அதன் தலைவர் அன்வர் நௌசாத் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

கல்வியியலாளர்கள் கௌரவிக்கப்படுகின்ற ஒரு விழாவில் பேசக் கிடைத்ததையிட்டு எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

பலரும் பலதை பேசினாலும் இந்த சபையில் பேசுவது பொருத்தம் எனக்கருதி சிலவிடயங்களை பேசலாம் என்று நினைக்கின்றேன்.

பொருத்தமான விசேட தரமிக்க, சிரேஷ்டத்துவம் மிகுந்த நிருவாகிகளுக்கு பொருத்தமான இடம் வழங்கப்படாமல் பழிவாங்கப்படுகின்றனர். சிரேஷ்டத்துவம் மிகுந்த அதிகாரிகளை அவமானப்படுத்தி சிரேஷ்டத்துவம் குறைந்தவர்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகள் கொடுத்து கௌரவப்படுத்தியுள்ளார் கிழக்கு மாகாண ஆளுநர். இதனைக் கேட்பதற்கு யாருமில்லாத நிலை ஏற்பட்டுள்ளது. இங்கு ஸ்ரீ ல.மு.கா.கட்சியின் தலைவர் உட்பட மூன்று நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளார்கள். இது தொடர்பில் மிகுந்த அவதானத்தைச் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்றார் அவர்.

இந்நிகழ்வில் ஸ்ரீல.மு.கா.கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹரீஸ், பைஷால் காசீம் மற்றும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் உதுமாலெப்பை உட்பட பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர். (05)

# சமூக விஞ்ஞானப் போட்டியில் தேசிய மட்டத்தில் சாதனை

## வவுனியா மாணவர்கள் படைப்பு

தேசிய மட்ட சமூக விஞ்ஞானப் போட்டில் வவுனியாவைச் சோந்த மூன்று மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர். அந்தவகையில், தரம் 7 பிரிவில் வவுனியா அல் அக்ஸா மகாவித்தியாலய மாணவி எம்.எம்.எவ்.நகா தேசிய மட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார். அத்துடன், தரம் 12 மற்றும் 13 பிரிவில் வவுனியா அல் அக்ஸா மகாவித்தியாலய மாணவி என்.நசூராபேகம் இரண்டாம் இடத்தையும், வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவி ஏ.டேனுஜா மூன்றாம் இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளனர். (05-100)

# 'தேடலில் வந்த தோழன்' கவிதை நூல் வெளியீடு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

திஹாரியை சேர்ந்த முஷ்பிகா முன்ஷிரின் தேடலில் வந்த தோழன் நூல் வெளியீடு திஹாரி அல் அஸ்ஹர் மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில் மூதூர் ஜே.எம்.ஐ. நிறுவன பணிப்பாளர் ஜே.எம்.இஹ்ஷான் தலைமையில் வெளியீடு செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் முதன்மை அழைப்பாளராக சிரேஷ்ட எழுத்தாளர் நஜ்முல் ஹுசைனும், ஹாதியா இஸ்லாமிய கற்கை நிறுவன அதிபர் அஷ்செய்க் அக்ரம் அப்துஸ் ஸமத்தும் கலந்து சிறப்பித்தனர்.

ஹாதியா இஸ்லாமிய கல்லூரி இறுதியாண்டு மாணவியாக கல்வியைத் தொடரும் நூலாசிரியர் முஷ்பிகா முன்ஷிரின் கன்னி கவிதைத் தொகுப்பு நூலாக வெளிவந்துள்ளது தேடலில் வந்த தோழன். (05)

# போட்டிப் பரீட்சையில் ஆள்மாறாட்டம் அ'புரத்தில் ஒருவர் பொலிஸால் கைது

இலங்கை சுங்கத் திணைக்களத்தில் சுங்கப் பரிசோதகர் பதவிக்கு ஆட்களை இணைத்துக்கொள்வதற்காக அநுராதபுரம் பிரதேசத்திலுள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற பரீட்சையில் ஆள்மாறாட்டம் செய்து, போலிஆவணங்களுடன் பரீட்சைக்குத் தோற்றவிருந்த ஒருவரை அநுராதபுரம் விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

இகிரிகொல்லாவ பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சுங்கத் திணைக்களத்தின் 2ஆம் தர சுங்க பரிசோதகர் பதவிக்காக சனிக்கிழமை நடைபெற்ற திறந்த போட்டிப் பரீட்சைக்கு இவர் தோற்றவிருந்தார்.

கைது செய்யப்பட்டவர் பரீட்சைக்கு தோற்றவிருந்த சட்டபூர்வ விண்ணப்பதாரரின் உறவினர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# கொள்ளைச் சந்தேகநபர்கள் கைது

மீகொடை பொருளாதார மத்திய நிலையத்தில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.இவர்கள் நேற்று அம்பாந்தோட்டை மற்றும் கொடகவெல பிரதேசங்களில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.இதேவேளை, இவர்களிடமிருந்து துப்பாக்கி மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.கடந்த 12ஆம் திகதி மீகொட பொருளாதார மத்திய நிலையத்தின் கடையொன்றில் கொள்ளையிடப்பட்டு அங்கு பணிபுரிந்த 23 வயதுடைய யுவதியை துப்பாக்கியை காட்டி மிரட்டிவிட்டு அங்கிருந்து தப்பியோடியிருந்தனர்.

# 2 மர்ம நபர்களின் கட்டுப்பாட்டில் ஐக்கிய மக்கள் சக்தி சிக்கியுள்ளது

## குற்றஞ்சாட்டுகிறார் சம்பிக்க ரணவாக்க

ஐக்கிய மக்கள் சக்தி இரண்டு மர்மநபர்களின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க குற்றஞ்சாட்டினார்.

கட்சியின் ஆதரவாளர்கள் விலகிச்செல்லும் நிலையை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித்பிரேமதாச உருவாக்குகின்றார், கட்சியை நாளாந்தம் பலவீனப்படுத்துகின்றார் என அவர் சண்டே டைம்ஸ் ஆங்கிலப் பத்திரிகைக்குக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாகவே ஜேவிபியால் அதிகளவு மக்கள் ஆதரவை பெறமுடிந்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்கட்சி தலைவர்களிற்கு அப்பால் வேறு இருவரின் கட்டுப்பாட்டின் கீழ் கட்சி உள்ளது என்பதை நான் தெரிவிக்கவேண்டியுள்ளது என தெரிவித்துள்ள சம்பிக்க ரணவக்க அவர்கள் யார் என்பதை நேரம்வரும்போது வெளியிடுவேன் எனவும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி என்பது தற்போது குடும்ப வர்த்தகமாக மாறியுள்ளது கட்சிக்குள் கடும் அதிருப்தி நிலவுகின்றது ஜனநாயகம் என்ற எதுவும் கட்சிக்குள் இல்லை எனவும் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜனாதிபதியின் உரை குறித்து நாடாளுமன்ற விவாதம் இடம்பெற்றவேளை தனக்கு உரையாற்றுவதற்காக சந்தர்ப்பத்தை ஐக்கியமக்கள் சக்தியின் தலைவர் வழங்காதமை குறித்து பண்டாரகமவில் இடம்பெற்ற அரசியல் கூட்டத்தில் சம்பிக்க ரணவக்க கடுமையாக சாடியிருந்தார். அது குறித்துத் தெரிவித்த அவர்,

நான் ஐக்கிய மக்கள் சக்தியின் கீழ் போட்டியிட்டது உண்மை தற்போது நான் சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினராக செயற்படுகின்றேன் நான் உரையாற்றுவதற்கான அனுமதியை கோரியவேளை எதிர்கட்சிதலைவரினால அது நிராகரிக்கப்பட்டுவிட்டதாக லக்ஸ்மன்கிரியல்ல தெரிவித்தார் எனவும் கூறினார்.

நான் ஏன் என கேள்வி எழுப்பியவேளை ஜனாதிபதியின் உரையை ஐக்கியமக்கள் சக்தி புறக்கணித்தவேளை நான் அவர்களுடன் இணைந்துகொள்ளாததன் காரணமாகவே உரைக்கான வாய்ப்பு மறுக்கப்பட்டது என லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்தார் என சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

# புலிகள் இயக்கத்துக்கு உயிரூட்ட முயன்றாராம் திரைத்துறை நபர் மீது குற்றப் பத்திரிகை தாக்கல்

தடைசெய்யப்பட்ட அமைப்பான விடுதலைப் புலிகள் அமைப்பை உயிர்ப்பிக்கச் சதி செய்ததாக திரைப்படத்துறையை சேர்ந்த ஆதிலிங்கம் மீதும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

கேரள மாநிலம் விழிஞ்சம் கடற்கரையில் கடந்த 2021ல் 300 கிலோ ஹெராயின் போதைப் பொருள் 5 ஏகே 47 துப்பாக்கிகள் பாகிஸ்தானில் தயாரிக்கப்பட்ட 1000 தோட்டாக்களை ரோந்து பணியில் ஈடுபட்ட கடலோர காவல்படையினர் கைப்பற்றினர். முதற்கட்ட விசாரணைக்கு பிறகு போதைப்பொருள் கடத்தல் வழக்கில் இலங்கையை சேர்ந்த 6 பேர் கைது செய்யப்பட்டனர். பின்னர் வழக்கு விசாரணை தேசிய புலனாய்வு முகமைக்கு (என்.ஐ.ஏ) மாற்றப்பட்டது.

என்.ஐ.ஏ கொச்சி அதிகாரிகள் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தினர். இதையடுத்து இலங்கைத் தமிழர்கள் உள்பட 13 பேரை என்.ஐ.ஏ. கைது செய்து கடந்த ஆண்டு ஜூன் 15 சிறப்பு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது. அதில் 'இவர்கள் அனைவரும் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் பயங்கரவாத செயல்களுக்குத் திட்டமிட்டிருந்தனர் என்றும் இந்திய பெருங்கடல் வழியாக போதைப் பொருட்கள் கடத்தலில் ஈடுபட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேலும் விசாரணையில் இந்த வழக்கில் நடிகை வரலட்சுமி சரத்குமாரிடம் வேலை பார்த்த முன்னாள் உதவியாளரான சென்னையை சேர்ந்த ஆதிலிங்கத்துக்கும் தொடர்பு இருப்பது தெரியவந்ததாக என்.ஐ.ஏ. தெரிவித்திருந்தது

போதைப்பொருள் மற்றும் ஆயுத கடத்தல் மூலம் கிடைத்த பணத்தை குணசேகரன் தலைவராகவும் ஆதிலிங்கம் துணை தலைவராகவும் இருக்கும் வகையில் டெமாக்ரடிக் பார்ட்டி ஆப் இந்தியா என்ற அரசியல் கட்சியை தமிழ்நாட்டில் ஆரம்பித்து நிதி பரிமாற்றம் செய்தது தெரியவந்ததாக என்.ஐ.ஏ. தெரிவித்திருந்தது.

இதையடுத்து, 14வது நபராக ஆதிலிங்கத்தை கைது செய்து என்.ஐ.ஏ. அதிகாரிகள் விசாரணை நடத்தினர். இந்நிலையில் ஆதிலிங்கம் மீது பூந்தமல்லி என்.ஐ.ஏ. சிறப்பு நீதிமன்றத்தில் அதிகாரிகள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளனர்.

இதுகுறித்து என்.ஐ.ஏ வெளியிட்டுள்ள அறிக்கை: இந்த வழக்கில் 14வது நபராக ஆதிலிங்கம் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. போதைப் பொருட்கள் மற்றும் ஆயுதங்களை சட்டவிரோதமாக மாற்றிக் கொடுக்கும் வேலையை இவர் செய்துள்ளார்.

போதைப் பொருட்கள் விற்பனை மூலம் பெற்ற பணத்தை ஹவாலா முறையில் மாற்றம் செய்யும் ஏஜென்டாகவும் ஆதிலிங்கம் செயல்பட்டுள்ளார். இந்த பணம் விடுதலை புலிகள் இயக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ் திரைப்படத்துறையில் பைனான்சியராக பணிபுரிந்த போது இலங்கையை சேர்ந்த குணசேகரன் அவரது மகன் திலீபன் உட்பட விடுதலை புலிகளின் முக்கிய தலைவர்கள் மற்றும் போதைப் பொருள் கடத்தல்காரர்களுடன் தொடர்பு கொண்டு ரகசியமாக செயல்பட்டு வந்திருக்கிறார். என என்ஐஏ தெரிவித்துள்ளது

காலைக்கதிர் Kalaikkathir

## தங்க நகைகள் அபகரிப்பு சந்தேகத்தில் பெண் கைது

மாவனெல்லை நகர் ஊடாகப் பேரிந்தில் பயணித்த பெண்ணொருவரின் சுமார் 4 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகளை அபகரித்து தப்பியோடிய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மாவனெல்லை பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரும் முறைப் பாட்டாளரும் சனிக்கிழமை மாலை ஒரே பேருந்தில் பய ணித்தபோது, மாவனெல்லை போகஸ் சந்திக்கு அருகில், சந்தேகநபர் முறைப்பாட்டாளரின் தங்க நகைகளை அபகரித்துக் கொண்டு தப்பி ஓடியுள்ளார் என்றும் பஸ் சாரதி, நடத்துனர் மற்றும் அங்கிருந்த மக்கள் அவரை துரத்திப் பிடித்துத் தம்மிடம் ஒப்படைத்தனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கொச்சிக்கடை தண்டுவெகாடுவ பிரதேசத்தை சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

## இளைஞனின் சடலம் மீட்பு

மாதம்பை தினிப்பிட்டிய பிரதேசத்தில் சனிக்கிழமை இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டதாக மாதம்பே பொலிஸார் தெரிவித்தனர். சடலமாக மீட்கப்பட்டவர் மாதமபே ஸ்ரீசுதர்ஷனராம விகாரையில் தற்காலிகமாக வசித்து வந்த 26 வயதான இளைஞர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் 5 தினங்களுக்கு முன்னர் உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். சடலம் உடற்கூறாய்வுகளுக்காக சிலாபம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

அவரது இறப்புக்கான காரணம் இதுவரையில் தெரியவரவில்லை என மாதம்பை பொலிஸார் தெரிவித்தனர் .

## கரட் விலை நேற்று திடீரென ரூபாய் 350க்கு வீழ்ந்தது

நுவரெலியாவில் 2000 ரூபாய்க்கு அதிகமாக விற்பனை செய்யப்பட்டு வந்த ஒரு கிலோ கரட்டின் விலை நேற்று 360 ரூபாய்க்கு வீழ்ச்சியடைந்தது.

நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் இந்த விலை வீழ்ச்சி பதிவானது.

மரக்கறி வகைகளின் விலை அதிகரிப்பினால் நுகர்வோரின்



கொள்வனவு வீழ்ச்சியடைந்திருக்கும் நிலைமை மற்றும் கரட் உற்பத்தி அதிகமாகியிருப்பது ஆகியவற்றால் சந்தையில் கரட்டின் விலை குறைந்துள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

தற்போது நுவரெலியா மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் சீரான காலநிலை நிலவுவதால் மலையகத்தில் மரக்கறி உற்பத்தி முன்னரைப் போன்று சிறப்பாக அமைந்துள்ளது. இந்நிலையில், கிட்டத்தட்ட அனைத்து மரக்கறி வகைகளின் விலைகளும் மலையகத்தில் குறைந்துள்ளதாக நுவரெலியா பொருளாதார மத்திய நிலைய வட்டாரத்திலிருந்து தகவல் தெரிவிக்கப்படுகிறது.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.02.2024இல் வெளியிடப்பெற்றது.